# தமிழ்நாடு
# பிற்படுத்தப்பட்டோர்
# பொருளாதார
# மேம்பாட்டுக் கழகம்


ன்னை-600002

Y562-211'N81
N81.
219800

# கழக நிதியுதவி பெற்று செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் சில.



வலையங்குளம் மண்பாண்டத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கம்,
வலையங்குளம், மதுரை மாவட்டம்



புதுக்கோட்டை மாவட்ட அண்ணா டாக்சி மற்றும் ஆட்டோ ஓட்டுநர்
தொழிற் கூட்டுறவு சங்கம், புதுக்கோட்டை

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,

## சென்னை-2.

---

**நோக்கம் :**

சமூகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழுகின்ற குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினருக்கு ஒரு நிரந்தர தொழில் வாய்ப்பை அளித்து அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார (ம) வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தனிப்பட்டதொரு அரசு நிறுவனமாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழக அரசால் 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழ் 16—11—81 அன்று பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் 807, அண்ணா சாலை சென்னை-2ல் செயல்பட்டு வருகிறது.

**மூலதனம் :**

தமிழ்நாடு அரசு இக்கழகத்திற்கென வாக்களிக்கப் பட்ட மூலதனம் ரூ. 10 கோடி. அதில் அரசு இதுவரை 30 இலட்சத்தை பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.

**சங்கங்கள் மூலம் கடனுதவி :**

கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் கொள்கையின் அடிப்படையில் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (ம) இதர பிற்பட்ட வகுப்பினர் ஆகியோரால் அமைக்கப்படும் வரையறுக்கப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்தப்படுகிற எல்லா தொழில்களுக்கும் மொத்த திட்ட மதிப்பீட்டில் 20% வீதம் (1/5 பாகம்) அதிகபட்சமாக ரூ. 25,000 வரை ஆரம்ப முதலீட்டுக் கடனாக 4% எளிய வட்டி விகிதத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவி அளித்து வருகிறது. மீதம் தேவைப்படும் தொகையில் ஒரு பகுதியை ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைவோரின் தகுதிக்கேற்ப மானியமாக பெற்றுத் தருகிறது. அதுபோக, எஞ்சியுள்ள தொகையை அரசுடமையாக்கப்பட்ட (அ) கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாகப் பெற்றுத் தர இக் கழகம் உதவி செய்கிறது.

**செயல்படுத்தும் திட்டங்கள் :**

தற்பொழுது இக்கழகம் 27 திட்டங்களை கூட்டுறவு முறையில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்த எடுத்துக் கொண்டுள்ளது. இத் திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 126 லட்சமாகும். இதில் இக்கழகம் ரூ. 24 லட்சத்தை ஆரம்ப முதலீட்டுக் கடனாக எளிய வட்டியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க உள்ளது. இதன் மூலம் சுமார் 1231 பிற்படுத்தப்பட்ட எளிய குடும்பங்கள் பயனடையும். (அட்டவணை 1-ல் காண்க) மேலும் இக் கழகம் சுமார் ரூ. 90 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாய நன்மைக்காக உருவாக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1,25,000 பிற்படுத்தப்பட்ட குடும்பங்கள் பயனடைய வாய்ப்பு உள்ளது.

219800

4562.24 'N81 N81



கீழ்க்கண்ட திட்டங்கள் பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

1. கல் உடைப்போர் கூட்டுறவுச் சங்கம்.
2. செங்கல் தயாரிப்பு கூட்டுறவுச் சங்கம்
3. தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கம்
4. எண்ணெய் தயாரிப்பு கூட்டுறவுச் சங்கம்
5. ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம்
6. தோல் கையுறைகள் (ம) உபபொருட்கள் கூட்டுறவுச் சங்கம்
7. மொசைக் கற்கள் (ம) சிமெண்ட் பொருட்கள் கூட்டுறவுச் சங்கம்
8. தென்னை நார் (ம) கயிறு உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம்
9. பானை உற்பத்தி தொழிற் கூட்டுறவுச் சங்கம்
10. மூங்கில் (ம) பிரம்பு தொழில் கூட்டுறவுச் சங்கம்
11. பட்டு நூல் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம்
12. ரசாயனப் பொருள் கூட்டுறவுச் சங்கம்
13. சுண்ணாம்பு பொருட்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்
14. பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம்
15. அலுமினிய பொருட்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்
16. தச்சு தொழிற் கூட்டுறவுச் சங்கம்
17. எழுது பொருட்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்
18. இரட்டை நூல் தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்
19. பாய் உற்பத்தி தொழிற் கூட்டுறவுச் சங்கம்
20. முந்திரி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம்
21. காகித அட்டைப் பெட்டி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம்

22. அச்சுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

மேற் குறித்த திட்டங்கள் போக, இன்னும் பல்வேறு திட்டங்கள் கூட்டுறவு முறையில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**அடிப்படைத் தகுதிகள் :**

1. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து பயனடையும் பயனாளிகள் குற்றப்பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட (ம) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இவை களில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. இவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு உட்பட்டதாக இருத்தல் அவசியம்.

**கூட்டுறவுச் சங்க கடமைகள் :**

கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த துறைகளில் பதிவு செய்த பிறகே இக்கழக கடன் கோரும் விண்ணப்பங்களை யும் இதர ஆவணங்களையும் அந்தந்த துறை மாவட்ட அலுவலரின் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது பரிந்துரையுடன் இக்கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும். இதேபோல் வங்கிக் கடன் பெற தேவையான கடன் விண்ணப்ப மனுக்களை வங்கிகளுக்கு சம்பந்தப்பட்ட துறை மாவட்ட அலுவலரின் பரிந்துரை யுடன் அனுப்பி, இதன் விபரத்தை இக்கழகத்திற்கு தெரியப் படுத்துதல் அவசியம். அத்துடன் இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியம் பெற தகுதி உள்ளவற் றிற்கு தகுந்த பிரேரணையுடன் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சித் திட்டம் அவர்களுக்கு அனுப்பி, விபரத்தை இக் கழகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். வங்கிகளிட மிருந்து இத் திட்டத்திற்கு கடனுதவி பெற இக் கழகம்

தகுந்த நடவடிக்கை எடுக்கும். வங்கிகள் இத் திட்டங்களுக்கு கடனுதவி வழங்கும் நேரத்தில் இக்கழகம் தனது ஆரம்ப முதலீட்டுக் கடனை நேராக சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி, வங்கிகள் மூலம் திட்டத்திற்குத் தேவைப்படும் முழுத் தொகையையும் பெற வகை செய்கிறது. இக் கழகம் வழங்கும் கடன் தொகைக்கு 1 ஆண்டுகால "விடுமுறைக் காலம்" கொடுக்கப்படும். கடன் கொடுத்த 2-வது ஆண்டு தொடக்கத்திலிருந்து, இக்கழக கடன் தொகையை 6 மாத கால தவணையிலோ அல்லது மாதத் தவணையிலோ தொழிலின் தன்மைக்கேற்ப வங்கி கடனுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலம் கடந்து செலுத்தப்படும் தவணைத் தொகைக்கு அபராத வட்டியாக 1% கூடுதலாக வசூலிக்கப்படும். இக்கழகம் கொடுக்கும் கடனுக்கு அடமானமாக வங்கிக்கு ஒப்பளிக்கப்பட்ட சொத்தின் மேல் 2-வது அடமானமாக அடமானப்பத்திரமும் அதற்கு வங்கியின் ஒப்புதலும் சேர்த்து கொடுக்கப்பட வேண்டும். இக்கழகம் மூலம் நிதி பெற்ற கூட்டுறவு சங்கங்கள் தங்களது காலாண்டு வளர்ச்சி அறிக்கையை தவறாது இக் கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஆர்வமுள்ள பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் கூட்டுறவு முறையில் இணைந்து தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்று மேன்மையடைய விரும்புவோர் இது குறித்து தங்கள் மாவட்ட ஆட்சியாளரிடம் தொடர்பு கொள்ளவேண்டும். மற்றும், இது குறித்து பொது மேலாளர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் அவர்களை கடித மூலமாகவோ அல்லது வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5-30 மணிக்குள், நெ. 807, அண்ணா சாலை, (5-ம் தளம்), சென்னை-600 002, என்ற முகவரியில் நேரில் சந்திக்கலாம்.

தலைவர்.

அட்டவணை—1

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

## செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தத் திட்ட மதிப்பீடு | 20% ஆரம்ப முதலீட்டுக் கடன் | ஆரம்ப முதலீட்டுக் கடன் வழங்கியது | ஆரம்ப முதலீட்டுக் கடன் வழங்கப்பட வேண்டியது | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| | **திருநெல்வேலி மாவட்டம் :** | | | | | | |
| 1. | கழுகுமலை கல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கம், கழுகுமலை .... | 50 | 0.94 | 0.188 | 0.188 | — | — |
| 2. | வள்ளியூர் யூனியன் தையல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கம், வடக்கன்குளம் ... | 30 | 1.35 | 0.250 | 0.100 | 0.150 | 0.150 |
| 3. | பருவக்குடி கல் உடைப்போர் கூட்டுறவு சங்கம், கரிவலம்வந்த நல்லூர் ... | 32 | 3.05 | 0.480 | — | — | — |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **காமராஜர் மாவட்டம்:** | | | | | | |
| 4. தார்பூசிய காகித உற்பத்தி தொழிற் கூட்டுறவு சங்கம், சாத்தூர் .. | 20 | 5·25 | 1·05 | 0·25 | 0·80 | — |
| **மதுரை மாவட்டம்:** | | | | | | |
| 5. அம்பி பிரியான் மின்விசைச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், உசிலம்பட்டி ... | 20 | 2·50 | 0·50 | 0·50 | — | — |
| 6. மதுரை மூங்கில் மற்றும் பிரம்பு தொழிலாளர் கூட்டுறவு சங்கம், தத்தநேரி ... | 40 | 1·00 | 0·20 | 0·20 | — | 0·075 |
| 7. வளையாங்குளம் மண்பாண்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கம் ... | 20 | 0·225 | 0·045 | 0·045 | — | 0·020 |
| 8. செக்கானூரணி அண்ணா அலுமினியம் கட்டிடப் பொருட்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம், செக்கானூரணி ... | 20 | 6·15 | 1·20 | 0·25 | 0·95 | 0·75 |
| 9. உசிலம்பட்டி ஜின்னிங் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் ... | 50 | 5·00 | 1·00 | 0·25 | 0·75 | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| பொன்முத்துராமலிங்கம் மாவட்டம் : | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 10. | அறிஞர் அண்ணா காரீய மின்கல உற்பத்தி தொழிற் கூட்டுறவு சங்கம், குன்றக்குடி ... | 20 | 14.00 | 2.80 | — | 2.80 | 2.00 |
| 11. | அலுமினிய கட்டிடப் பொருட்கள் உற்பத்தி தொழிற் கூட்டுறவு கட்டிட சங்கம், தட்டட்டி கிராமம். | 20 | 6.15 | 1.23 | — | 1.23 | — |
| புதுக்கோட்டை மாவட்டம் : | | | | | | | |
| 12. | கோயில்பட்டி தச்சு மற்றும் கருமாரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம், புதுக்கோட்டை ... | 20 | 2.50 | 0.50 | 0.50 | — | 1.50 |
| 13. | புதுக்கோட்டை மாவட்ட அண்ணா டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம், புதுக்கோட்டை ... | 20 | 5.00 | 1.00 | 0.25 | 0.75 | 2.00 |
| 14. | காமராஜபுரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், புதுக்கோட்டை ... | 51 | 2.55 | 0.510 | — | 0.510 | — |

தஞ்சாவூர் மாவட்டம் :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. பட்டுக்கோட்டை இரசாயனப் பொருட்கள் தொழிற் கூட்டுறவு பட்டுக்கோட்டை ... | 23 | 2.50 | 0.50 | — | 0.50 | 0.200 |

தர்மபுரி மாவட்டம் :


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. இந்தூர் கருங்கல் ஜல்லி உடைப்போர் கூட்டுறவு சங்கம் ... | 200 | 4.00 | 0.800 | 0.250 | 0.550 | — |
| 17. பட்டுநூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம், ஆணைக்கல்லணூர் ... | 124 | 2.37 | 0.474 | — | 0.474 | — |
| 18. புளியங்கொட்டைத்தூள் உற்பத்தி தொழிற் கூட்டுறவு சங்கம், ராயக்கோட்டை ... | 60 | 0.62 | 1.00 | 0.25 | 0.750 | — |

பெரியார் மாவட்டம் :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19. முத்திரையர் (சீர்மரபினர்) பணியன் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம், சேடர் பாளையம் ... | 200 | 37.65 | 7.43 | — | 7.43 | — |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| | **திருச்சி மாவட்டம் :** | | | (ரூபாய் லட்சத்தில்) | | | |
| 20. | தொழிலக தோல் கையுறை உற்பத்தி தொழிற் கூட்டுறவு சங்கம், காந்தலூர் ... | 15 | 1·75 | 0·350 | — | 0·350 | 1·05 |
| 21. | அம்மாபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், அம்மாபாளையம் ... | 20 | 0·40 (ஒருவருக்கு ரூ. 400 வீதம்) | 0·080 | — | 0·080 | — |
| 22. | காளையப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், கடவூர் | 25 | 0·625 (ஒருவருக்கு ரூ. 500 வீதம்) | 0·125 | — | 0·125 | — |
| 23. | புதுப்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், புதுப்பாளையம் ... | 15 | 0·375 (ஒருவருக்கு ரூ. 500 வீதம்) | 0·075 | — | 0·075 | — |

மத்திய கூட்டுறவு அச்சகம், சென்னை-600 002.



கோயில்பட்டி தச்சு மற்றும் கொல் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்,
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை



கழுகுமலை கல் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், கழுகுமலை,
கோவில்பட்டி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்



வள்ளியூர் யூனியன் தையல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கம், வடக்கன்குளம், திருநெல்வேலி மாவட்டம்



மதுரை பிரம்பு மற்றும் மூங்கில் பொருட்கள் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கம், தத்தநேரி, மதுரை